செய்தி மாலை

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம்

மடல்-60 டிசம்பர், 2025

வாரத்திற்கு ஐந்து நாட்கள் வங்கிச் சேவையை அமல்படுத்தக்கோரி வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு போராட்ட அறைகூவல்

கடுமையான பணியாளர் பற்றாக்குறை காரணமாக வங்கிக் கிளைகளில் பணிபுரியும் ஊழியர்கள், அதிகாரிகள் மற்றும் மேலாளர்கள் அதிகமான பணிச் சுமை மற்றும் மன அழுத்தம் ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளாவதைக் கருத்தில் கொண்டு வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு, வாரத்திற்கு ஐந்து நாட்கள் வங்கிச் சேவையினை அறிமுகப்படுத்தக் கோரியது.

2015 ஆம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட 10வது இருதரப்பு ஒப்பந்தத்தில், ஒவ்வொரு மாதமும் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகள் வங்கிகளுக்கு விடுமுறை நாட்களாக இருக்கும் என்றும், அதற்கு பதிலாக மீதமுள்ள சனிக்கிழமைகள் முழு வேலை நாட்களாக செயல்படவும் ஒப்புக் கொள்ளப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 11வது இருதரப்பு ஒப்பந்தம் கோவிட் பெருந்தொற்று காலகட்டத்தில் ஏற்பட்டதால் அனைத்து சனிக் கிழமைகளையும் விடுமுறை நாட்களாக அறிவிக்க வேண்டும் என்ற UFBU கோரிக்கையினை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டது.



அதனைத் தொடர்ந்து, கடந்த 12வது இருதரப்பு ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளின் போது இக்கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, விரிவான விவாதங்களுக்குப் பிறகு 7-12-2023 அன்று கையெழுத்திடப்பட்ட MOU-வில் இக்கோரிக்கையினை IBA ஒப்புக்கொண்டது.

வாரம் ஐந்து நாள் வங்கிச் சேவை முறையை அறிமுகப்படுத்துவது தொடர்பான கோரிக்கை IBAவினால் ஏற்கனவே ஒன்றிய அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக பரிந்துரைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாகியும் அனைத்து சனிக்கிழமைகளையும் வங்கி விடுமுறை நாட்களாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையினை செயல்படுத்தாது ஒன்றிய அரசு தொடர்ந்து காலம் தாழ்த்தி வருகின்றது.

நிதித்துறை கட்டுப்பாட்டில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கி, LIC மற்றும் GIC ஆகிய நிறுவனங்களில் ஐந்து நாட்கள் வேலைத்திட்ட நடைமுறை ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ள நிலையில், வங்கிகளில் இந்த நடைமுறையினை ஏற்க ஒன்றிய அரசு வேண்டுமென்றே காலதாமதம் செய்வது வங்கி ஊழியர்களிடையே கொந்தளிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மார்ச் **2025**ல் **UFBU** இக்கோரிக்கையினை வலியுறுத்தி போராட்டம் மற்றும் வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்ததை அடுத்து, தலைமை தொழிலாளர் ஆணையர் நடத்திய சமரசக் கூட்டத்தில் நிதி அமைச்சக பிரதிநிதிகளும் கலந்து கொண்டு இக்கோரிக்கை தங்களுடைய தீவிரமான பரிசீலனையில் இருப்பதாக உறுதியளித்ததைத் தொடர்ந்து மார்ச் **2025**ல் அறிவித்திருந்த வங்கி ஊழியர் வேலைநிறுத்தப் போராட்டத்தினை **UFBU** ஒத்திவைத்தது.

ஆனால், ஆறு மாதங்களைக் கடந்தும் ஒன்றிய அரசு முக்கியமான இக்கோரிக்கையின் மீது எவ்வித முடிவினையும் அறிவிக்காத நிலையில் கடந்த **27-11-2025** அன்று நடைபெற்ற **UFBU** கூட்டத்தில் ஏற்கனவே ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் எட்டப்பட்ட இக்கோரிக்கையினை நிறைவேற்றாத ஒன்றிய அரசாங்கத்தின் போக்கிற்கு எதிராக நம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அகில இந்திய வேலைநிறுத்தம் உள்ளிட்ட பின்வரும் போராட்டத் திட்டங்களை வங்கி ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

01-12-2025 to 15-01-2026	வங்கிகள் இணைப்பு, அந்நிய முதலீடு, தனியார்மயம் ஆகிய வங்கித்துறை மீதான தாக்குதல்கள் குறித்து அனைத்து ஊழியர்களும் பங்கேற்கும் வகையில் அனைத்து மையங்களிலும் பிரச்சாரக் கூட்டங்கள், பயிலரங்கங்கள், கருத்தரங்குகள் ஆகியவை நடத்திடுதல்
01-12-2025	நம் போராட்டம் குறித்து **UFBU** சார்பில் **IBA**க்கு விளக்கிக் கடிதம் எழுதுதல்
03-12-2025	நம் போராட்டம் குறித்து **UFBU** சார்பில் **CLC**க்கு விளக்கிக் கடிதம் எழுதுதல்
05-12-2025	நம் போராட்டம் குறித்து **UFBU** சார்பில் **DFS**க்கு விளக்கிக் கடிதம் எழுதுதல்
08-12-2025	நம் போராட்டம் குறித்து **UFBU** சார்பில் அனைத்து வங்கி **CMD**க்கு விளக்கிக் கடிதம் எழுதுதல்
09-12-2025	அனைத்து வங்கிக் கிளைகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் **IBA**விற்கு கோரிக்கை மனு அனுப்புதல்
12-12-2025	அனைத்து வங்கிக் கிளைகளிலும் பணியாற்றும் ஊழியர்கள் ஒன்றிய நிதி அமைச்சருக்கு கோரிக்கை மனு அனுப்புதல்
16-12-2025	கோரிக்கை அட்டை அணிதல்
23-12-2025	அனைத்து மாநிலத் தலைநகரங்களில் ஆர்ப்பாட்டம்
30-12-2025	அனைத்து நகரம், மாவட்ட மையங்களில் ஆர்ப்பாட்டம்
04-01-2026	டிவிட்டர் பிரச்சாரம் **(TWITTER CAMPAIGN)**
05-01-2026	அனைத்து மாநிலத் தலைநகரங்களில் தர்ணா - வேலை நிறுத்த நாள் அறிவித்தல்
13-01-2026	செய்தியாளர் சந்திப்பு மற்றும் பத்திரிகை செய்தி வெளியீடு
3rd WEEK OF JANUARY, 2026	அகில இந்திய வேலை நிறுத்தம்

தோழர்களே, வங்கி ஊழியர் மற்றும் அதிகாரிகளுடைய பொறுமை ஒன்றிய அரசினால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, நம்முடைய நியாயமான இக்கோரிக்கை தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறது. எனவே வங்கி ஊழியர்கள் மீது திணிக்கப்பட்டுள்ள இந்தப் போராட்ட நடவடிக்கைகளை ஒற்றுமையுடனும், போர்க்குணத்துடன் முழுமையாக செயல்படுத்திட அனைத்து உறுப்பினர்களையும் தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக்கொள்கின்றது.

சம்மேளனத்தின் அனைத்து இணைப்பு சங்கங்களும் உடனடியாக உறுப்பினர் கூட்டங்களை நடத்தி, போராட்டத் திட்டங்களை முழுமையாக செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

பொதுத்துறை வங்கிகளை தனியாருக்கு தாரை வார்க்கத் துடிக்கும் ஒன்றிய அரசுக்கு வங்கி ஊழியர் சங்கங்கள் கடும் எதிர்ப்பு

இந்தியப் பொருளாதார வளர்ச்சியில் பொதுத்துறை வங்கிகளின் அளப்பரிய பங்களிப்பை உதாசீனப்படுத்தும் ஒன்றிய நிதியமைச்சர் - வங்கி ஊழியர் சங்கங்கள் கண்டனம்:

கடந்த நவம்பர் **04, 2025** அன்று டெல்லி பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் சொற்பொழிவாற்றிய ஒன்றிய நிதியமைச்சர், நாட்டிலுள்ள பொதுத்துறை வங்கிகளின் பங்களிப்பினை குறைவாக மதிப்பீடு செய்ததோடு, அவற்றை தனியார்மயம் செய்வதற்கான நடவடிக்கைகளை நியாயப்படுத்தியும் தெரிவித்த கருத்துக்களுக்கு கடுமையான எதிர்ப்பினை வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பு (**UFBU**) தெரிவித்ததோடு அக்கருத்துக்களை முழுமையாக நிராகரித்துள்ளது.



வங்கி தனியார்மயமாக்கல் நடவடிக்கை குறிப்பிட்ட வாடிக்கையாளர் பிரிவுக்கு மட்டுமே வங்கிச் சேவைகளை வழங்கக் கூடும். ஆனால், பொதுத்துறை வங்கிகள் அனைவருக்குமான வங்கிச் சேவை, சமூக நீதியினை நிலைநாட்டும் கடன் அளிப்பு, கிராமப்புற பொருளாதார மேம்பாட்டில் பங்கேற்பு மற்றும் தேசிய பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு முதுகெலும்பாக இருந்து வருகிறது என்பதை தொழிற்சங்கங்கள் வலியுறுத்துகிறது.

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்ட பொதுத்துறை வங்கிகள்:

1969 ஆம் ஆண்டு வங்கிகள் தேசியமயம் ஆக்கப்பட்ட புரட்சிகர நடவடிக்கை நாட்டின் சமூக, பொருளாதார அடித்தளத்தை மறுவடிவமைத்து, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் சமமான தேசிய வளர்ச்சிக்கான கருவியாக அமைந்தது.

- தேசியமயமாக்கலுக்கு முன்பு வங்கித் துறை தொழில்துறை நிறுவனங்கள் மற்றும் உயர்மட்ட வணிகக் குழுக்களுக்கு மட்டுமே சேவை செய்தது. விவசாயிகள், தொழிலாளர்கள், சிறு வணிகங்கள், பெண்கள், நலிவடைந்த பிரிவு மக்கள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு கடன் பெற்றிடும் உரிமையை வங்கிகள் தேசியமய நடவடிக்கை பெற்றுத் தந்தது.

- சில ஆயிரம் நகர்ப்புற கிளைகளிலிருந்து, பொதுத்துறை வங்கிகள் லட்சக்கணக்கான கிராமங்களுக்கு விரிவடைந்தன. கிராமப்புற வங்கிகளில் "குறைந்த லாபம்" என்பதால் தனியார் வங்கிகள் இந்தப் பகுதிகளுக்கு சேவை செய்ய முன்வராத நிலையில் பொதுத்துறை வங்கிகளே கிராமப் பகுதிகளில் அதிகமான கிளைகளைத் திறந்து மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திட பணியாற்றின.


• முன்னுரிமைத் துறை கடன், விவசாயக் கடன்கள், நலிவுற்ற பிரிவினருக்கான கடன் திட்டங்கள், கிராமப்புற சுய உதவிக் குழுக்கள், மாணவர் கல்விக் கடன்கள், **MSME** வங்கிச் சேவைகள் ஆகியவற்றிற்கான உந்துசக்தியாக பொதுத்துறை வங்கிகள் விளங்கின.

• பொருளாதார மந்தநிலைகள், நிதித்துறை நெருக்கடிகள் மற்றும் **COVID-19** பெருந்தொற்று காலங்களின்போது, பொதுத்துறை வங்கிகள் மட்டுமே வாடிக்கையாளர் சேவையினை தொடர்ந்து அளித்து, தேசத்துடன் உறுதியாக நின்றன.

வங்கிகள் தனியார்மயமாக்கலின் தீய விளைவுகள் - பொதுமக்களின் சேமிப்பு கொள்ளை போகும் அபாயம்:

வங்கிகள் தனியார்மயமாக்கலைப் பெருமைப்படுத்தும் ஒன்றிய நிதி அமைச்சரின் முயற்சிகள் அடிப்படை யதார்த்தங்களையும் வரலாற்றின் படிப்பினைகளையும் புறக்கணிக்கின்றன.

• தனியார் வங்கிகள் லாபம் அதிகமாக கிடைக்கும் பிரிவினருக்கு மட்டுமே வங்கிச்சேவைகளை வழங்குகின்றன. அவை லாபமற்ற கிளைகளை மூடுகின்றன, சாதாரண வாடிக்கையாளருக்கு கட்டணங்களை அதிகரிப்பதோடு, நிரந்தர வேலைகளை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதன் மூலம் சமூகத்தின் பலவீனமான பிரிவு மக்களுக்கு வங்கிகளில் வேலை வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றது.



• கிராமப்புற மற்றும் நகர்ப்புற இந்தியாவில் ஜன்தன், **DBT** பரிமாற்றங்கள், ஓய்வூதியங்கள் மற்றும் **MGNREGA** நிதிச் சேவைகள் போன்ற முக்கியமான தேசிய கடமைகள் பொதுத்துறை வங்கிகளால் மட்டுமே பெருமளவில் நிறைவேற்றப்படுகின்றன, தனியார் வங்கிகளால் அல்ல.

• ஆட்குறைப்பு, ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தல், வேலைப் பாதுகாப்பு பறிப்பு, இட ஒதுக்கீடு முறை ஒழிப்பு மற்றும் தொழிற்சங்க உரிமைகள் மீதான தாக்குதல்களுக்கு வங்கிகள் தனியார்மயமாக்கல் நடவடிக்கை வழிவகுக்கிறது.

தனியார் வங்கிகளில் முறைகேடு மற்றும் அவற்றின் மூடுதலை இந்தியா பலமுறை கண்டுள்ளது:

• **YES** வங்கி, குளோபல் டிரஸ்ட் வங்கி, லட்சுமி விலாஸ் வங்கி மற்றும் பிற தனியார் வங்கிகள் சரிவுற்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவ்வங்கிகளின் வாடிக்கையாளரின் வைப்புத் தொகைகளை பொதுத்துறை வங்கிகள் மட்டுமே மீட்டுள்ளன. முழுமையாக தனியார்மயமாக்கப்பட்ட வங்கிகளில், மக்கள் சேமிப்பினை யார் பாதுகாப்பார்கள்?

• நாட்டின் பொதுப் பணத்தால் உருவாக்கப்பட்ட தேசிய சொத்துக்கள் தனியார் கார்ப்பரேட்டுகளுக்கு மாற்றப்படும்போது, நாட்டின் பொதுச் செல்வம் தனியார் பெருமுதலாளிகளின் லாபமாக மாற்றப்படும்.

• பொதுத்துறை வங்கிகளின் செயல்பாடுகள், பாராளுமன்றம், **CAG** மற்றும் இந்திய மக்களுக்கு கட்டுப்பட்டது. ஆனால், தனியார் வங்கிகள் அதன் பங்குதாரர்களுக்கு மட்டுமே சொந்தமானது.

• பெருநிறுவனங்கள் தவறு செய்து வங்கிகளை ஏமாற்றியது மற்றும் அதன் காரணமாக வாராக்கடன் நெருக்கடியை உருவாக்கியதன் விளைவாகவே நிதித்துறை சரிவு ஏற்பட்டதே அன்றி, விவசாயிகள், சிறு கடன் வாங்குபவர்கள், தனிநபர்கள் அல்லது வங்கிகள் பொதுத்துறையில் இருந்த காரணத்தால் அல்ல என்பது அனைவரும் அறிந்ததே.



• பெரும் கார்பொரேட் நிறுவனங்களுக்கு தாராளமாக கடன் வழங்கும் கலாச்சாரம்தான் பொதுத்துறை வங்கிகளை சீரழித்ததே அன்றி இந்நிலைமைக்கு தேசியமயமாக்கலைக் குறை கூறுவது வரலாற்று ரீதியாகவும் பொருளாதார அடிப்படையிலும் தவறானது.

• **2008**ம் ஆண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடிக்குப் பிறகு, சர்வதேச அளவில் பல நாடுகள் வங்கிகளின் மீது வலுவான பொதுக்கட்டுப்பாட்டை உருவாக்கின. இத்தகைய உலகளாவிய அனுபவத்திலிருந்து பொதுத்துறை வங்கிகளின் அவசியத்தை இந்திய ஒன்றிய அரசு கற்றுக்கொள்ள வேண்டுமேயன்றி, அத்தகைய தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது.

• பொதுத்துறை வங்கிகள் வெறும் வணிக வங்கிகள் மட்டுமல்ல. அவை சாதாரண குடிமக்களின் நலத்திட்டங்கள், ஓய்வூதியங்கள், மானியங்கள், மக்களின் சேமிப்பு மற்றும் அவற்றின் நிதிப் பாதுகாப்பைக் கையாளும் பொது பயன்பாட்டு நிறுவனங்களாகும்.


பொதுத்துறை வங்கிகள் இந்திய நாட்டின் அளப்பரிய செல்வம் - இன்று இந்திய வங்கித்துறை வலுவாக உள்ளதற்கு முக்கியக் காரணம் அவை பொதுத்துறையில் இருப்பதே ஆகும்:

• ஜன் தன் யோஜனா கணக்குகள் **90%** க்கும் அதிகமானவை பொதுத்துறை வங்கிகளால் மட்டுமே தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

• பொதுத்துறை வங்கிகளின் உள்கட்டமைப்பு மூலமாக மட்டுமே கோவிட்-**19** பேரிடர் காலத்தில் நேரடி நிதியுதவி (**DBT**) வங்கிப் பணப் பரிமாற்றங்கள் செயல்படுத்தப்பட்டன.

• முன்னுரிமை கடன் மற்றும் சமூக வங்கித் திட்டங்கள் முழுமையாக பொதுத்துறை வங்கிகளால் மட்டுமே செயல்படுத்தப்படுகின்றது.

• கிராமப்புற வங்கிச் சேவை மற்றும் சாதாரண மக்களுக்கு நிதிப் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு, பொதுத்துறை வங்கிகளால் மட்டுமே சென்றடைந்துள்ளன.



உலகில் எந்த நாட்டிலும் தனியார்மயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் அனைவருக்குமான வங்கிச் சேவையை உறுதிசெய்ய முடியவில்லை.

வங்கிகளுக்குத் தேவையான மூலதனம் வழங்குதல், சிறந்த நிர்வாகம், மேம்பட்ட தொழில்நுட்பம், மனித வள மேம்பாடு ஆகியவற்றால் மட்டுமே வங்கித்துறை சிறப்பாக பணியாற்றிட முடியுமே அன்றி, தனியார்மயப் படுத்துவதால் அல்ல. மாறாக, தனியார்மயமாக்கல் நாட்டின் பொதுச்செல்வத்தை தனியார் கைகளுக்கு அளித்திடும் அபாயத்தினை ஏற்படுத்தும் என்பதே உண்மையாகும்.

வங்கிகள் தனியார்மய நடவடிக்கைகளால் இந்திய நாட்டிற்கு ஏற்படும் கேடுகள்:

- வங்கிகள் தனியார்மயமாக்கல் தேசிய மற்றும் சமூக நலனை முற்றிலுமாக புறக்கணித்திடும்.
- வங்கிகள் தனியார்மயமாக்கல் நாட்டின் நிதி உள்ளடக்கத்தை ஆபத்தில் ஆழ்த்துகிறது.
- வங்கிகள் தனியார்மயமாக்கல் வேலைப் பாதுகாப்பையும் சாதாரண மக்கள் சேமிப்பினையும் அச்சுறுத்துகிறது.
- வங்கிகள் தனியார்மயமாக்கல் பெரு நிறுவனங்களுக்கு மட்டுமே பயனளிக்கிறது.
- வங்கித்துறை, சமூகப்பாதுகாப்பு மற்றும் சமூகநீதியினை அமல்படுத்த உதவ வேண்டுமேயன்றி, அவை தனியார் முதலாளிகளுக்கு லாபம் ஈட்டும் வணிகமாக மாற்றப்படக் கூடாது.

ஒன்றிய அரசுக்கு வங்கிச் சங்கங்களின் கோரிக்கைகள் - கோரிக்கைகளை வென்றெடுக்க போராட்டங்களுக்குத் தயாராவோம்:

- எந்தவொரு பொதுத்துறை வங்கியும் தனியார்மயமாக்கப்படாது என்று ஒன்றிய அரசாங்கத்தின் திட்டவட்டமான உத்தரவாதம் வழங்கப்பட வேண்டும்.

- அனைத்து பொதுத்துறை வங்கிகளுக்கும் தேவையான மூலதன ஆதரவு, தொழில்நுட்ப நவீனமயமாக்கல் மற்றும் வெளிப்படையான நிர்வாகம் மூலம் பொதுத்துறை வங்கிகளை வலுப்படுத்தப்பட வேண்டுமே அன்றி தனியார்மயப்படுத்துதல் மூலம் சீரழிவிற்கு ஆட்படுத்தப்படக் கூடாது.

- வங்கி வாடிக்கையாளர்கள், வங்கி ஊழியர்கள் மற்றும் பொது மக்களின் உரிமைகளைப் பாதிக்கும் எந்தவொரு முடிவும் செயல்படுத்தும் முன்பாக பொது மக்களின் ஆலோசனை மற்றும் நாடாளுமன்ற விவாதம் நடத்தப்பட வேண்டும்.

பொதுத்துறை வங்கிகள் அனைவருக்கும் சொந்தமானவை. அவற்றைப் பாதுகாக்க, இந்திய மக்கள், வங்கி ஊழியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் அனைத்துப் பிரிவு மக்களையும் ஒன்றிணைத்து போராடுவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் மேற்கொண்டுள்ளது.

நாட்டின் தேசிய சொத்தான பொதுத்துறை வங்கிகளை தனியாருக்கு விற்க நாம் எப்போதும் அனுமதிக்கக் கூடாது. பொதுத்துறை வங்கிகளை தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கு தீவிரமாக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள ஒன்றிய அரசினைக் கண்டித்தும், தேச நலனுக்கு எதிரான இத்தகைய திட்டங்களை கைவிடக்கோரியும் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கும் போராட்டங்களில் முழுமையாகப் பங்கேற்று பொதுத்துறை வங்கிகளை பாதுகாப்போம்.

நீலகிரி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் 15வது மாநாடு - 02-11-2025

நீலகிரி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் 15வது மாநாடு கடந்த 02.11.2025 அன்று உதகமண்டலம் நகரில் நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் பணியாற்றும் ஏராளமான உறுப்பினர்கள் மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம், அவர்கள் துவக்கி வைத்தார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் நிர்வாகிகள், பல்வேறு மாவட்ட சங்க பொறுப்பாளர்கள் ஆகியோர் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர். மாநாட்டில் துவக்கவுரை ஆற்றிய தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் E அருணாசலம் அவர்கள் தன்னுடைய உரையில், ஒன்றிய அரசின் பொதுத்துறை விரோத நடவடிக்கைகளை கண்டித்ததுடன், இதனை எதிர்த்து மேலும் தீவிரமாகப் போராட வேண்டியதன் அவசியத்தினை வலியுறுத்தினார்.

தற்போது பொதுத்துறை வங்கிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள 20% வரையிலான அந்நிய முதலீட்டினை 49% வரை உயர்த்துவதற்கான ஒன்றிய அரசின் முடிவு, பொதுத்துறை வங்கிகளுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக மாறியுள்ளது என்று தோழர் E அருணாசலம் அவர்கள் கூறினார்.

இதனால், நம் நாட்டின் வங்கிகள் அந்நிய நாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாட்டுக்குள் செல்லும் அபாயம் ஏற்பட்டு, சுதந்திரத்திற்கு முன் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆட்சி செய்த காலத்தைப் போன்ற நிலைமைக்கு இட்டுச் செல்லும் என்று தோழர் E அருணாசலம் அவர்கள் எச்சரித்தார்.



மேலும், அந்நிய நாட்டு வங்கிகள் நம் தனியார் வங்கிகளை முழுமையாக அபகரிக்கும் திட்டங்கள் ஏற்பட்டு பெரும் அச்சுறத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன என்றும், நாட்டில் ஏழை, எளிய மக்கள் கல்விக்கடன், சிறு தொழில் கடன், விவசாயக் கடன் போன்றவற்றை பெறுவதற்கு பொதுத்துறை வங்கிகள்தான் ஆதாரமாக உள்ளது என்று எடுத்துரைத்தார்.

இந்திய நாட்டிற்கு தனியார் வங்கிகள் அல்லது அந்நிய நாட்டு வங்கிகள் தேவையில்லை. இந்திய மக்களுக்கும் இந்தியப் பொருளாதாரத்தின் ஸ்திரத் தன்மைக்கும் உறுதுணையாக இருந்து பொதுத்துறை வங்கிகள் மட்டுமே செயலாற்ற முடியும் என்றும் தோழர் E அருணாச்சலம் மேலும் கூறினார்.

தனியார்மய நடவடிக்கைகளை எதிர்த்து வங்கி ஊழியர் சங்கங்கள் தொடர்ந்து நாடு தழுவிய போராட்டங்களை நடத்தி வருவதாகவும், இக்கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் டிசம்பர் 10ம் தேதி புது டில்லியில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் சார்பாக மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற உள்ளது என்றும் தெரிவித்தார்.

மாநாட்டின் இறுதியில், நீலகிரி மாவட்ட வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவராக தோழர் கஜேந்திரன் அவர்களும், பொதுச் செயலாளராக தோழர் ராஜ்குமார் அவர்களும், பொருளாளராக தோழர் தேவராஜ் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிதாகப் பொறுப்பேற்றுள்ள நீலகிரி மாவட்ட வங்கி ஊழியர் சங்கப் பொறுப்பாளர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வாழ்த்துகின்றது.

தனியார்துறை வங்கி ஊழியர் சங்கங்களின் தர்ணா - கரூர் - 03-11-2025



தனியார்துறை வங்கிகளில் பணியாற்றும் ஊழியர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி **03-11-2025** அன்று கரூர் வைசியா வங்கியின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள கரூர் நகரில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்துடன் இணைந்த தனியார் துறை வங்கி தொழிற்சங்கங்களின் மாபெரும் தர்ணா போராட்டம் நடைபெற்றது.

தர்ணா போராட்டத்தில் ஏராளமான வங்கி ஊழியர்கள் கலந்துகொண்டனர். தர்ணா போராட்டத்தினை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாசலம் அவர்கள் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

தோழர் **E** அருணாசலம் அவர்கள் தன்னுடைய துவக்கவுரையில், அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் இடைவிடாத போராட்டங்களின் விளைவாக இந்திய நாட்டில் இயங்கி வந்த தனியார் துறை வங்கிகள் **1969**ம் ஆண்டு அரசுடைமை ஆக்கப்பட்டன என்றும், அதன் விளைவாக ஏராளமான வங்கிக் கிளைகள் துவக்கப்பட்டதுடன், வங்கிச் சேவை அனைத்துப்பிரிவு மக்களுக்கும் கிடைக்கப்பெற்றது என்று விளக்கினார்.



தனியார் வங்கி ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு முறியடிக்க மேலும் ஒற்றுமையுடனும் வலிமையுடனும் எதிர்த்துப் போராடுவதற்கான உறுதியுடன் தனியார் வங்கி ஊழியர்களிடையே ஒற்றுமையினைப் பேணி, அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பதாகையின் கீழ் தனியார்துறை வங்கிகளில் செயல்படும் தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களிடையே ஒருங்கிணைப்பினை மேலும் வலிமையாக்கிட வேண்டும் என்று தோழர் **E** அருணாசலம் அவர்கள் வலியுறுத்தினார்.

அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் எண்பதாவது ஸ்தாபன ஆண்டு மற்றும் தனியார்துறை வங்கி ஊழியர்களின் போராட்டம் குறித்த **சிறப்புக் கூட்டம் திருநெல்வேலி நகரில் 10-11-2025 அன்று சிறப்புற நடைபெற்றது.** தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.



வங்கி ஊழியர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் மற்றும் பொதுத்துறை வங்கிகளை தனியார் மயமாக்கும் அரசின் முயற்சிகள் மற்றும் தனியார்துறை வங்கிகளை அந்நிய நாட்டு வங்கிகள் கைப்பற்றும் அபாயம் குறித்து தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் விளக்கிப் பேசி, இத்தகைய மக்கள் விரோத நடவடிக்கைகளை எதிர்த்து வங்கி ஊழியர்கள் தொடர்ந்து போராட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.



தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக் குழுக் கூட்டம்
சென்னை - 13-11-2025

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மத்தியக்குழுக் கூட்டம் **A K** நாயக் பவன், சென்னையில் **13-11-2025** அன்று நடைபெற்றது.

தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் அவைத் தலைவர் தோழர் **G** வைரப்பன் மற்றும் சம்மேளனத்தின் தலைவர் தோழர் **A** சிதம்பரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சம்மேளனத்தின் நிர்வாகிகள், மத்தியக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் பொறுப்பாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள், பொதுத்துறை வங்கிகளில் போதிய ஊழியர் நியமனம், வாரத்தில் ஐந்து நாள் வங்கிச் சேவை போன்ற நிலுவையிலுள்ள முக்கியமான கோரிக்கைகள் மீது நடைபெற்ற **UFBU** மற்றும் மத்திய தொழிலாளர் நல ஆணையருடன் நடைபெற்ற சமரசப் பேச்சுவார்த்தை குறித்த விபரங்களை விளக்கினார்.



அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் முப்பதாவது மாநாடு வரும் **2026,** ஏப்ரல் மாதம் **19** முதல் **22**ம் நாட்களில் பெங்களூர் மாநகரில் நடைபெறவுள்ளது குறித்த தகவல்களை தோழர் **C H** வெங்கடாசலம் அவர்கள் அறிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனத்தின் மாநாட்டு முடிவுகள் மற்றும் தீர்மானங்கள் மற்றும் அவற்றின் மீதான தொடர் நடவடிக்கைகள் குறித்து சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் தோழர் **E** அருணாச்சலம் அவர்கள் விரிவாக எடுத்துரைத்தார்.

தனியார்துறை வங்கி ஊழியர் சங்கங்களின் போராட்ட நடவடிக்கைகள், கூட்டுறவு வங்கி ஊழியர்களின் ஓய்வூதியக் கோரிக்கை, வங்கி முகவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், வங்கி நிதி வசூலிப்போர் கோரிக்கைகளின் தற்போதைய நிலைமை, மாவட்ட சங்கங்களின் செயல்பாடுகள் மற்றும் அவை சந்திக்கும் பிரச்சினைகள் குறித்தும் கூட்டத்தில், விரிவாக விவாதிக்கப்பட்டது.

நூறாண்டுகால தொழிலாளர் போராட்டங்களின் விளைவாக உருவான இந்தியத் தொழிலாளர் சட்டங்கள் அனைத்தும் ஒரே நாளில் ரத்து

கடந்த **100** ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியத் தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்கள், எதிர்கொண்ட துன்பங்கள் மற்றும் தியாகங்களின் விளைவாக உருவானதே இதுகாறும் இந்திய நாட்டுத் தொழிலாளர் பெற்றுவந்த தொழிலாளர் உரிமைகள் மற்றும் தொழிற்சங்க உரிமைகள் ஆகும்.

இந்தியத் தொழிலாளி வர்க்கம், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை நமது மண்ணிலிருந்து விரட்டியடிப்பதற்கான சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக பங்கேற்றதோடு, பல்வேறு தொழிலாளர் உரிமைகளையும் போராடிப் பெற்று தொழிலாளர்களைப் பாதுகாத்தது.



1920ம் ஆண்டு அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC) துவங்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற தொழிலாளர்களின் போராட்டங்களின் காரணமாக, 1926ம் ஆண்டில் உருவான இந்திய தொழிற்சங்கச் சட்டத்தின் (INDIAN TRADE UNIONS ACT, 1926) விளைவாகவே இந்தியத் தொழிலாளி வர்க்கம் தங்களுக்கான தொழிற்சங்கங்களை ஸ்தாபித்து, தங்கள் உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டும், தங்கள் முன்னேற்றத்திற்காகப் போராடவும் இன்றளவும் உரிமை பெற்றுள்ளனர்.

நீண்டகாலப் போராட்டங்களின் விளைவாகப் பெற்ற இந்தியத் தொழிலாளர் சட்டங்கள் முற்றாக நீக்கம்:

பல்வேறு காலகட்டங்களில் மேற்கொண்ட தீவிரமான போராட்டங்கள் மூலம், இந்தியத் தொழிலாளிகள் பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களை வென்றெடுத்துள்ளனர். இன்று தொழிலாளர்கள் சுரண்டலுக்கு ஆளாக்கப்படுவதற்கு எதிராகவும், தங்கள் உரிமைகளுக்காகவும் போராடுவதற்கு அத்தகைய தொழிலாளர் சட்டங்கள் மூலமாக கிடைத்த உரிமைகளே காரணமாகும்.

இந்தச் சட்டங்களில் பல்வேறு குறைபாடுகள் இருந்திடினும், இந்தத் தொழிலாளர் சட்டங்களை செயல்படுத்துவதில் அரசாங்கங்களும், பெருநிறுவனங்களும், தொழிலாளர்களுக்கு எதிரான பாரபட்சங்கள் மற்றும் மீறல்களைக் கடைபிடித்தாலும், அத்தகைய அநீதிகளுக்கு எதிராகப் போராட தற்போதைய தொழிலாளர் சட்டங்களே வாய்ப்பை வழங்குகின்றன.

ஆகவேதான், நமது நாட்டில் உள்ள ஒட்டுமொத்த தொழிற்சங்க இயக்கமும், ஊழியர்களுக்கு தீங்கு விளைவிக்கும் ஒன்றிய அரசாங்கத்தின் தொழிலாளர் சட்டத் திருத்த முயற்சிகளை கடுமையாக எதிர்த்துப் போராடி வருகின்றன.

கார்ப்பொரேட் முதலாளிகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்த ஒன்றிய அரசு:

ஒட்டுமொத்த இந்தியத் தொழிலாளரின் எதிர்ப்பினையும் மீறி, 150 ஆண்டுகால தொழிலாளர் போராட்டங்கள் விளைவாக உருவாக்கப்பட்ட 44 சட்டங்களில் 15 சட்டங்களை ரத்து செய்துவிட்டு, மீதமுள்ள 29 சட்டங்களைச் சுருக்கி நான்கு சட்ட தொகுப்புகளாக 2010ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய சட்டங்களை ஒன்றிய அரசு 21-11-2025 முதல் அமுல்படுத்தியுள்ளது. இந்த நான்கு தொழிலாளர் குறியீடுகள் தொழிலாளர்களின் பல்வேறு உரிமைகளை பறித்து, தொழிற்சங்க இயக்கம் மற்றும் தொழிலாளர் நடவடிக்கைகளை பலவீனப்படுத்தி, முதலாளிகளுக்கு பல்வேறு சலுகைகளை அளித்துள்ளன.

முதலாளிகளின் அடிமைகளாக தற்காலிகப் பணியாளர்களை நியமிக்கும் யுக்தி - நிரந்தரப் பணிகளுக்கு முடிவுரை எழுதிய ஒன்றிய அரசு:

ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சில நிவாரணங்களை வழங்குவதாகக் கூறி, நிரந்தர வேலை வாய்ப்புகள் உருவாக்குவதற்கான நோக்கம் கைவிடப்பட்டுள்ளது. ஒப்பந்த வேலைகளை நிலைநிறுத்தி நிரந்தர வேலைகளை மறுப்பதே இதன் நோக்கமாகும். இச்செயலானது, இந்திய நாட்டில் உள்ள வேலை தேடும் இளைஞர்களுக்கு ஒன்றிய அரசு செய்யும் பெரும் துரோகமாகும்.



இந்திய தொழிலாளரில் சுமார் 50% பெண் தொழிலாளர்கள் உள்ள நிலையில், இரவு நேரப் பணிகளிலும், ஆபத்திற்கு உள்ளாக்கக்கூடிய வேலைகளிலும் பெண்களைப் பணியமர்த்துவதற்கு தற்போது இருந்த தொழிலாளர் சட்டங்களில் கட்டுப்பாடுகள் இருந்தன. ஆனால், ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ், ஆண்களுடன் பெண்களை சமன் செய்தல் என்ற பெயரில் இத்தகைய கட்டுப்பாடுகள் முற்றிலுமாக நீக்கப்படுகின்றன. இதனால், பெண் தொழிலாளர்கள் மேலும் சுரண்டப்பட்டு பெரும் இன்னல்களுக்கு உள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தியத் தொழிலாளரின் வீரம் செறிந்த வேலை நிறுத்தங்களை புறந்தள்ளி தொழிலாளர் விரோத சட்டங்களை அமல்படுத்திய ஒன்றிய அரசின் தொழிலாளர் விரோதப் போக்கு:

ஒன்றிய அரசாங்கத்தின் இத்தகைய பிற்போக்கான தொழிலாளர் குறியீட்டு சட்டங்களுக்கு எதிராக அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் உள்ளிட்ட இந்திய நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்க இயக்கமும் 2019, ஜனவரி 8 மற்றும் 9, 2020, ஜனவரி 8, 2020, நவம்பர் 26, 2022, மார்ச் 28 மற்றும் 29, மற்றும் சமீபத்தில் 2025, ஜூலை 9 ஆகிய நாட்களில் நாடு தழுவிய வேலை நிறுத்தங்கள் மூலம் தனது எதிர்ப்பை பதிவு செய்தது.

ஆனால், ஒன்றிய அரசாங்கம், அதன் முதலாளித்துவ கார்ப்பொரேட் சார்பு கொள்கைகள் காரணமாக, இந்த ஊழியர் விரோத தொழிலாளர் குறியீடுகளை ஒருதலைப்பட்சமாக திணித்துள்ளன. நிரந்தரமாக தொழிலாளர்களை நியமனம் செய்யும் முறையினை முற்றிலுமாக ஒழிப்பதோடு, ஒப்பந்தத்தில் பணியமர்த்தப்படும் தொழிலாளர்களையும் குறைந்த காலத்திற்கு மட்டுமே பணியாற்றிட அனுமதிப்பதுடன், பின்னர் எந்த நேரமும், எத்தகைய காரணமும் இன்றி அவர்களுடைய வேலையைப் பறித்திடவும் முதலாளிகளுக்கு இச்சட்டங்கள் வழி வகுக்கின்றன.

தொழிலாளர்கள் சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் கூட்டுபேர உரிமை ஆகியவை மறுக்கப்பட்டு, அவர்களுடைய பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு ஆகியவை இந்தச் சட்டங்கள் மூலம் மறுக்கப்படுகின்றது.

கார்ப்பரேட் முதலாளிகளின் அழுத்தங்களுக்கு அடி பணிந்து தன்னிச்சையாக ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ள இச்சட்டங்கள், தொழில் நடத்துவதை எளிமைப்படுத்துதல் என்ற பெயரில், தொழிலாளர்களை சுரண்டுவதற்கான முழு சுதந்திரத்தை முதலாளிகளுக்கு வழங்குகின்றன.

ஒன்றிய பாஜக அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை, இந்தியத் தொழிலாளி வர்க்கம் மற்றும் தொழிற்சங்க இயக்கங்கள் மீதான கொடூரமான தாக்குதல் ஆகும். ஏற்கனவே ஒன்றிய அரசாங்கம் தொழிலாளர் கொள்கை சீர்திருத்தம் என்ற போர்வையில் ஷ்ரம் சக்தி நிடி - 2025 என்ற திட்டத்தினை அறிவித்து தொழிலாளர்களைப் பிரித்தாளும் சூழ்ச்சியில் முனைந்துள்ளது.



புதிய நாசகார தொழிலாளர் குறியீடு சட்டங்களை இந்தியத் தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டு போராடி நிச்சயமாக முறியடிக்கும்:

ஒன்றிய பாஜக அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகள் அனைத்தும், உழைக்கும் மக்கள் மீது மெய்நிகர் போரை பிரயோகித்து, நாட்டின் செல்வத்தினை உற்பத்தி செய்யும் தொழிலாளர்களை புதிய சட்டங்களின் துணையுடன் பெரு முதலாளிகள் மற்றும் கார்ப்பொரேட்டுகள் மேலும் சுரண்டுவதற்கு உதவுகின்றன.

தொழிலாளர் வர்க்கத்தின் நலனுக்கு எதிரான இத்தகைய தொழிலாளர் விரோத சட்ட மாற்றங்களை கண்டித்து 26-11-2026 அன்று தமிழ்நாட்டின் பல்வேறு மையங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்கள் இந்தியத் தொழிலாளி வர்க்கத்துடன் ஒன்றிணைந்து பெருந்திரளாகப் பங்கேற்றனர்.

ஒன்றிய அரசின் நிதி சேவைகள் துறை செயலாளருடன் UFBU பிரதிநிதிகள் புது டில்லியில் சந்திப்பு - 27-11-2025

நடைமுறையில் இருந்த 29 தொழிலாளர் சட்டங்களுக்கு மாற்றாக நான்கு தொழிலாளர் சட்டங்களை அமல்படுத்துவது குறித்த 21-11-2025 தினம் வெளியிடப்பட்ட ஒன்றிய அரசாங்கத்தின் அரசிதழ் அறிவிப்பைத் தொடர்ந்து, தொழிற்சங்கங்கள் மற்றும் ஊழியர்களிடையே ஏராளமான அச்சங்களும் அமைதியின்மையும் எழுந்துள்ளன.

இதன் பின்னணியில், ஒன்றிய நிதி அமைச்சகத்தின் நிதி சேவைகள் துறை செயலாளர், வங்கிச் சங்கங்களின் கூட்டமைப்பினை(UFBU) தொடர்பு கொண்டு இந்நடவடிக்கை குறித்து விவாதிக்க வருமாறு அழைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து, 27-11-2025 அன்று, புது தில்லியில் உள்ள DFS அலுவலகத்தில், DFS செயலாளர் திரு M நாகராஜு அவர்கள் தலைமையிலான நிதித்துறை அதிகாரிகள் குழுவினை UFBU அமைப்பின் அனைத்து பிரதிநிதிகளும் சந்தித்தனர்.

புதிய தொழிலாளர் குறியீடுகள் குறித்த தொழிற்சங்கங்களின் கருத்துக்களை அறிந்து கொள்ள அழைக்கப்பெற்ற இக்கூட்டத்தில், இந்திய தொழிற்சங்க இயக்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தின் பல ஆண்டுகள் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவாக நம் நாட்டில் தொழிலாளர் உரிமைகள் செயல்படுத்தப்பட்டன என்பதை **UFBU** பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தொழிலாளர் சட்டங்களில் மேம்பாடுகள் மற்றும் மாற்றங்கள் அவசியமானவை என்றாலும், மத்திய தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசித்த பின்னரே இவ்வாறான சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்று **UFBU** பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

மேலும், நமது நாட்டின் இளைஞர்களுக்கு முறையான நிரந்தர வேலை வாய்ப்புகள் தேவை என்றும், எனவே புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொழிலாளர் சட்டங்கள் ஒப்பந்த அடிப்படையிலான வேலைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதற்கு பதிலாக நிரந்தரமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு ஊக்குவிக்கும் வகையில் அமைந்திட வேண்டும் என்று **UFBU** பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

தொழிலாளர் குறியீடு சட்டத்தில் ஒரு வருட சேவைக்குப் பிறகு பணிக்கொடை வழங்க வழிவகை அறிவிக்கப்பட்டாலும், வங்கி ஊழியர்களுக்கு மற்ற துறை பணியாளர்களைப் போல பணிக்கொடை வரம்பை ரூ 25 லட்சமாக உயர்த்த வேண்டும் என்ற **UFBU**வின் கோரிக்கை பல மாதங்கள் கடந்தும், நிதி அமைச்சகத்தால் ஏற்கப்படவில்லை என்பதையும் **UFBU** பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

நடைமுறையிலிருந்த தொழிலாளர் சட்டங்களின் கீழ் உள்ள சில விதிகள் மற்றும் செயல்முறைகள் எளிமைப்படுத்தப்பட வேண்டியிருந்தாலும், புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள தொழிலாளர் குறியீடுகள் தற்போதைய தொழிலாளர் உரிமைகளில் எதையும் நீர்த்துப்போகச் செய்யக்கூடாது என்று **UFBU** வலியுறுத்தியது. தொழிலாளர் சட்டங்களில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பாக மத்திய தொழிற்சங்கங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம் என்றும் **UFBU** வலியுறுத்தியது.

மேலும், **DFS** உடனான இச்சந்திப்பின்போது, நிலுவையில் உள்ள நம் கோரிக்கைகளான வாரத்தில் **5** நாட்கள் வங்கிச் சேவையை செயல்படுத்துதல், பொதுத்துறை வங்கிகளில் பணியாளர் மற்றும் அதிகாரி இயக்குநர்கள் பதவிகளை நிரப்புதல், வங்கிகளில் எழுத்தர், துணை ஊழியர்கள் மற்றும் பாதுகாப்பு ஊழியர்களின் போதுமான ஆட்சேர்ப்பு, ஓய்வூதியத்தை மேம்படுத்துதல், ஓய்வு பெற்றவர்களுக்கு குழு மருத்துவ காப்பீட்டு பிரீமியம் வங்கி நிர்வாகங்களால் ஏற்கப்படவேண்டும் போன்ற கோரிக்கைகளுக்கு மேலும் காலம் தாழ்த்தாது தீர்வு கண்டிடும் வகையில் நிதிச்சேவைத் துறை செயலாளர் நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று **UFBU** வலியுறுத்தியது.

பொதுத்துறை வங்கிகளை வலுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு **UFBU** துணையாக இருக்கும் என்றும், அவை தொடர்பான சங்கங்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் **UFBU** அரசிடம் சமர்ப்பிக்கத் தயாராக இருப்பதால், வங்கித்துறை தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்க **UFBU** உடன் கூட்டத்தை **DFS** துவங்க வேண்டும் என்றும் **DFS** செயலாளரிடம் வங்கிச் சங்க கூட்டமைப்பின் பிரதிநிதிகள் வலியுறுத்தினர்.

‘தேசம் காப்போம் - மக்களைக் காப்போம்’ - மத்தியத் தொழிற்சங்கங்கள் விவசாயத் தொழிலாளர்கள் மாநிலமெங்கும் பெருந்திரள் தர்ணா போராட்டம்

நவம்பர் 26, 2020ம் நாள் நம் நாட்டில் தொழிலாளி வர்க்கம் மற்றும் விவசாயிகளின் இயக்கத்தின் வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நாள் ஆகும். மத்திய தொழிற்சங்கங்கள் (CTU) மற்றும் வேளாண் தொழிலாளர் அமைப்புகளின் கூட்டுத் தளத்தின் சார்பாக சுமார் இருபது கோடிக்கும் அதிகமான உழைக்கும் மக்களும் விவசாயிகளும் 2020, 26 நவம்பர் அன்று நாடு தழுவிய பொது வேலைநிறுத்தத்தை வெற்றிகரமாக அனுசரித்தனர்.



ஒன்றிய அரசின் மக்கள் விரோதக் கொள்கை காரணமாக, நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, வேலையில்லா திண்டாட்டம், வேலையிழப்பு ஆகியன அதிகரித்து, சாமானியர்களின் அன்றாட வாழ்க்கையை கடினமாக்கி, பெரும்பான்மையான மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு இல்லாத



சூழல் ஏற்பட்டுள்ள நிலையில், இத்தகைய கார்ப்பரேட் ஆதரவு, மக்கள் விரோத அரசாங்கத்தை எதிர்த்து தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் போராட்ட நடவடிக்கைகள் நாடெங்கிலும் மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்று வருகின்றன.

நவம்பர் 26, 2020 அன்று, சம்யுக்த் கிசான் மோர்ச்சா (SKM) அழைப்பின் பேரில் வரலாற்றுச் சிறப்புமிக்க விவசாயிகளின் போராட்டத்தைத் தொடங்கி, ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்து போராடி விவசாய விரோத மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்ய ஒன்றிய பாஜக அரசாங்கத்தை நிர்ப்பந்தித்து வெற்றி கண்டது.

இப்போராட்டங்களின் தொடர்ச்சியாக, ஆண்டுதோறும் நவம்பர் **26**ம் நாளன்று மத்திய, மாநில தொழிற்சங்கத்தினர் மற்றும் சம்யுக்த கிசான் மோர்ச்சா (**SKM**) அமைப்பின் விவசாயிகள் அமைப்புகள் சார்பில், விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வெகுஜன பிரச்சார போராட்டங்களை நாடெங்கிலும் அனுசரித்து வருகின்றன.



- இந்திய நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களையும் பொதுச்சேவைகளையும் தனியார்மயமாக்கும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள்
- ஒன்றிய அரசின் புதிய மின் திருத்த மசோதா **2025** அமலாக்கல்
- ஒன்றிய அரசின் தொழிலாளர் துறை வெளியிட்டுள்ள வரைவு தொழிலாளர் கொள்கை ஷ்ரம் சக்தி நிதி -**2025** திட்டம்
- மாநில அரசுகளை மீறி புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை **21-11-2025** அன்று அமலாக்கிய ஒன்றிய அரசின் எதேச்சாதிகாரம் ஆகியவற்றைக் கண்டித்தும்,
- அமெரிக்க அரசாங்கத்தின் அளவுக்கதிகமான வரிவிதிப்பிலிருந்து இந்திய நாட்டின் சிறு தொழில்புரிபவர்கள் மற்றும் வியாபாரிகளை பாதுகாக்க வலியுறுத்தியும்
- வாக்குரிமையை பறிக்கும் வகையிலான தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம்(**SIR**) திரும்ப பெறக்கோரியும்
- ஒன்றிய அரசின் தேச விரோத அடக்கு முறைகளுக்கு எதிராகவும், மதச்சார்பற்ற ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும்



மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 26-11-2025 அன்று தமிழ்நாட்டின் மாவட்டத் தலைநகரங்களில் நடைபெற்ற பெருந்திரள் தர்ணா போராட்டங்களில் AITUC, CITU, தொமுச, HMS, INTUC, AICCTU, AIUTUC, WTUC, MLF, TUCC, சங்கங்கள், மற்றும் வங்கி, இன்சூரன்ஸ், தொலைத் தொடர்பு, பாதுகாப்புத் துறை, அரசு ஊழியர் சம்மேளனங்கள் உட்பட அனைத்துத் தொழிற்சங்கங்களைச் சார்ந்த தொழிலாளர்கள் பெருமளவில் கலந்துகொண்டனர்.



தொழிலாளர்-விவசாயிகளின் ஒற்றுமையின் வரலாற்று முக்கியத்துவம், அவர்களின் உடனடிப் பிரச்சினைகளுக்குப் போராடுவது மட்டுமல்லாமல், இந்திய நாட்டில் மதச்சார்பற்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவும், அனைவருக்கும் நீதி மற்றும் சமத்துவ சமூகத்தினை உறுதி செய்வதற்காகவும் ஏற்பட்டது ஆகும்.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் ஒருங்கிணைந்த இந்தப் பெருந்திரள் பேரணிகளில் கலந்துகொண்ட நம் உறுப்பினர்களை தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் பாராட்டுகின்றது. இந்திய நாட்டுத் தொழிலாளர்களுடைய பணிப் பாதுகாப்பு மற்றும் தொழிலாளர் உரிமைகளை கடுமையாகப் பாதிக்கும் புதிய தொழிலாளர் குறியீடு சட்டங்களை கைவிடக்கோரி UFBU அமைப்பிலுள்ள அனைத்து வங்கிச் சங்கங்களுடனும் ஒன்றிணைந்து தீவிரமான போராட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.



விரைவில் அகில இந்திய வங்கி ஊழியர் சங்கம் அறிவிக்கவுள்ள போராட்டங்களில் நமது உறுப்பினர்கள் முழுமையாகப் பங்கேற்பதுடன், நாம் இதுகாறும் பெற்றுள்ள தொழிற்சங்க உரிமைகளைப் பாதுகாப்பதற்கு நடைபெறும் இப்போராட்டங்களில் முன்னணிப் படையாக நம் தோழர்கள் இருந்திட வேண்டுமென்று தமிழ்நாடு வங்கி ஊழியர் சம்மேளனம் வேண்டுகின்றது.

2026
ஆண்டுக்கான
வங்கி விடுமுறை நாட்கள்
தமிழ்நாடு அரசு

அகில இந்திய
வங்கி ஊழியர் சங்கம்
80வது ஆண்டு ஸ்தாபன தினம்
20 ஏப்ரல் 2026



JAN 01 THU
ஆங்கிலப் புத்தாண்டு



JAN 15 THU
பொங்கல்




JAN 16 FRI
திருவள்ளுவர்நாள்



JAN 17 SAT
உழவர் திருநாள்



JAN 26 MON
குடியரசு தினம்



FEB 01 SUN
தைப்பூசம்



MAR 19 THU
தெலுங்கு வருடப் பிறப்பு




MAR 21 SAT
ரம்ஜான்



MAR 31 TUE
மகாவீரர் ஜெயந்தி



APR 01 WED
வங்கி ஆண்டுக் கணக்கு முடிவு



APR 03 FRI
புனித வெள்ளி



APR 14 TUE



தமிழ் வருடப் பிறப்பு / அம்பேத்கர் ஜெயந்தி



MAY 01 FRI
மே தினம்



MAY 28 THU
பக்ரீத்



JUN 26 FRI
மொகரம்



AUG 15 SAT
சுதந்திர தினம்



AUG 26 WED
மிலாது நபி



SEP 04 FRI
கிருஷ்ணஜெயந்தி



SEP 14 MON
விநாயகர்சதுர்த்தி



OCT 02 FRI
காந்தி ஜெயந்தி



OCT 19 MON
ஆயுத பூஜை



OCT 20 TUE
விஜய தசமி



NOV 08 SUN
தீபாவளி



DEC 25 FRI
கிறிஸ்துமஸ்